**வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் (ஆர்எம்ரீஎவ்) - 2015**

வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 2005 திசெம்பர் 09 இல் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் திறைசேரி செயலாளருக்கும் மற்றும் வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நம்பிக்கையாளர்களுக்கும் இடையில் கைசாத்திடப்பட்ட வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் 11 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் ஸ்தாபிப்பு**

வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் 2005 திசெம்பர் 09 ஆம் திகதி கைசாத்திடப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பு உறுதி ஒன்றின் மூலம் நம்பிக்கைப் பொறுப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. ஆரம்பத்தில், வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினூடாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் பராமரிக்கப்பட்ட வீதிகளிற்காக நிதிகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டதுடன் இறுதியில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் பேணப்பட்ட வீதிகளும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஆகையால், வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் தற்போதைய பிரதான பயனாளி வகுப்பு ஏ மற்றும் பீ வீதிகளின் பராமரிப்பிற்குப் பொறுப்பான வீதி அபிவிருத்தி அதிகாரசபையாகும். வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியமானது நம்பிக்கை பொறுப்பாளர் சபையால் முகாமை செய்யப்படுகின்றது. வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கான நிதியளிப்பு ஒழுங்கமைப்புக்கள் இலங்கை அரசாங்கத்தின் வருடாந்த வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. ஆரம்பத்தில் வீதித் துறை உதவிச் செயற்திட்டத்தின் ஊடாக 2012 முதல் 2014 செப்தெம்பர் வரையான காலப்பகுதிக்காக ரூபா 1,365 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 10.5 மில்லியனை வழங்குவதற்கு சர்வதேச அபிவிருத்திச் சங்கம் உடன்பட்டது. அதில் ரூபா 1,300 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 10 மில்லியன் காலரீதியான பராமரிப்பு நோக்கங்களிற்கு நிதியளிப்பதற்கு ஒதுக்கப்பட்டதுடன் ரூபா 65 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 0.5 மில்லியன் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் மீண்டெழும் கிரயத்தை எதிர்கொள்வதற்கு ஒதுக்கப்பட்டிருந்தது. மேலும், நிதியத்தின் கீழ் வீதிப் பராமரிப்பு வேலைகளை தொடர்வதற்கு வீதித் துறை உதவிச் செயற்திட்டத்திலிருந்து ஐ.அ.டொலர் 5.45 மில்லியன் ஒதுக்கீடு மாற்றப்பட்டிருந்தது. உலக வங்கியின் நாட்டிற்கான பணிப்பாளரின் 2015 மார்ச் 25 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம், நிதியத்திற்கான நிதி ஒழுங்கமைப்புக்கள் 2015 யூன் 30 இல் முடிவுறுத்தப்பட்டிருந்தது.

## 1.3 நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

### குறிக்கோள்கள்

நம்பிகைப் பொறுப்பு உறுதியின் 4 ஆம் பிரிவின் பிரகாரம், நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் குறிக்கோள்களாவன,

(அ) வீதி வலையமைப்பின் பாதிப்புக்களைத் தவிர்ப்பதற்காக உரிய நேரத்தில் தேசிய வீதிகளின் வழக்கமான மற்றும் காலரீதியான வீதிப் பராமரிப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு நிதியளித்தல்.

(ஆ) நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினை முகாமை செய்து அபிவிருத்தி செய்தல் மற்றும் வீதிப் பராமரிப்பு நடவடிக்கைகளிற்கு உடனடியாக தேவைப்படாத அவற்றின் ஏதும் ஒரு பகுதியை பொருந்தக்கூடிய வகையில் செயல்நுட்பமான மற்றும் பாதுகாப்பான முதலீட்டுக் கலவையிலுள்ள அத்தகைய முதலீடுகள் மற்றும் பிணையங்களில் காலத்திற்குக் காலம் முதலீடு செய்தல் மற்றும் அத்தகைய முதலீட்டுக் கலவையிலிருந்து நிதியத்திற்கு அதிக வருமானத்தை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் ஏதும் அத்தகைய முதலீடுகள் மற்றும் பிணையங்களை வைத்திருத்தல், விற்பனை செய்தல் அல்லது வேறுவழியில் அகற்றுதல்.

(இ) நம்பிக்கைப் பொறுப்பின் குறிக்கோள்களிற்கு வழிகாட்டியானதும் அல்லது அவசியமானதும் எனத் தோன்றுகின்ற நாட்டில் நிலவுகின்ற சட்டங்களின் பிரகாரம் ஏதாவது உரிமைகள், சிறப்புரிமைகள், அனுமதிப்பத்திரங்கள் மற்றும் சலுகைகள் என்பவற்றினை ஏதாவது அத்தகைய அரசாங்கம் அல்லது வேறு அதிகாரசபையிலிருந்து பெற்றுக்கொள்ளல்.

(ஈ) மேற்குறிப்பிட்ட குறிக்கோள்களை மேம்படுத்துவதில் எவ்வழிகளிலும் பெற்றுக்கொண்ட நம்பிக்கை பொறுப்பின் வருமானத்தை முழுமையாக பிரயோகிப்பதற்கும் அத்தகைய வருமானத்தின் பகிர்ந்தளிக்காதவற்றை நம்பிக்கைப் பொறுப்பின் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காகவன்றி வேறு நபரிற்கோ அல்லது அமைப்பிற்கோ காசாக அல்லது வேறு வழிகளில் மேற்கொள்ளப்படுதல்.

(உ) நம்பிக்கை பொறுப்பின் ஏதாவது குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கும் அடைந்துகொள்வதற்கும் தற்செயலான அல்லது வழிகாட்டியாக இருக்கின்ற அத்தகைய சகல சட்டபூர்வமான விடயங்களையும் செய்தல். மற்றும்

(ஊ) நம்பிக்கை பொறுப்பின் குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்கு மிகவும் உகந்தது என எண்ணுகின்றவாறு அவர்களிற்கு ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்கள் மற்றும் தற்துணிபுகளை நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் பிரயோகிப்பதனை உறுதிப்படுத்தல்.

## 1.4 பயனாளிகள்

நம்பிக்கை பொறுப்பு உறுதியின் 7 ஆம் பிரிவின் பிரகாரம், முன்னைய நெடுஞ்சாலைகள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சும் தற்போதைய உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, தற்போதைய உள்ளூராட்சி

மற்றும் மாகாணசபைகள் அமைச்சு அல்லது ஏதாவது வேறு அரச நிறுவனங்கள் அல்லது நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திலிருந்து நிதிகளை மீளப்பெறுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பிற்கான பயனாளியொருவராக அரசாங்கத்தால் அங்கீகரிக்கக்கூடிய வேறு ஏதாவது அரசாங்க நிறுவனங்கள் இந்த நம்பிக்கைப் பொறுப்பின் கீழ் பயனாளிகளாக இருப்பார்கள்

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.6 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1. அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றினை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடு**

ரூபா 1.28 மில்லியன் தொகையான திறைசேரி உண்டியல்களிலுள்ள முதலீடுகள் மீது பெறப்பட்ட வட்டி வருமானம் தனி மூலமாக இனம்காணப்படாமல் நிதியத்தின் செலவினத்திற்கெதிராக தீர்வு செய்யப்பட்டிருந்தது.

**2.2.2 சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

2006 திசெம்பர் 22 ஆம் திகதிய பிஎவ்/423 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பிரிவால் தேவைப்படுத்தப்பட்டவாறு முன்னைய ஆண்டின் செப்தெம்பர் 15 ஆம் திகதியில் அல்லது அதற்கு முன்னர் தேசிய பாதீட்டுப் பணிப்பாளர் நாயகம் மற்றும் அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகம் ஆகியோருக்கு தயாரித்துச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் வருடாந்த பாதீடு மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் மேற்சொல்லப்பட்ட சுற்றறிக்கையின் 4.3 ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த

செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்படுவதற்கு வேண்டப்பட்டிருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களுடன் தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதிகளின் நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2015 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலங்கள் | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் ஒதுக்கீடு | | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | மீளாய்வாண்டின் போது | | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| நன்கொடையளிக்கும் முகவர் | 15.95 | 2,073.5 | 4.036 | 542.69 | 12.33 | 1,626.47 |
| இலங்கை அரசாங்கம் | - | | | 4,259.80 | - | 14,456.73 |
| **மொத்தம்** | **15.95** | **2,073.5** | **4.036** | **4,802.49** | **12.33** | **16,083.20** |

குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் நிதியத்தின் வெற்றிகரமான அமுல்படுத்தலை உறுதிப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட நிதி மற்றும் பௌதீக ரீதியான இலக்குகளை மாதாந்தம், காலாண்டு ரீதியாக, மற்றும் வருடாந்தம் சுட்டிக்காட்டப்பட்டு முழுக் காலப்பகுதியையும் மேவுகை செய்யும் வகையில் விரிவான ஒட்டுமொத்த திட்டம் தயாரிக்கபபட வேண்டிய போதிலும் அத்தகைய திட்டம் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக ஐ.அ.டொலர் 15.95 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் நிதியத்தின் இறுதிக் காலப்பகுதியிலுள்ளவாறு ஐ.அ.டொலர் 12.33 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 3.2 பௌதீக முன்னேற்றம்

வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியமானது வீதிப் பராமரிப்பு நோக்கங்களிற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு நிதிகளை வழங்குவதற்கு மேலதிகமாக 12 தேசிய வீதிகளின் பல பிரிவுகளின் பராமரிப்பு வேலைகளை மேற்கொண்டிருந்தது. செயன்முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம், 2013 மற்றும் 2014 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்த 59.6 கிலோமீற்றர்கள் நீளமுடைய 12 தேசிய வீதிகளின் பராமரிப்பு வேலைகள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,201.38 மில்லியன் கிரயத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும் அவதானிப்புக்கள் பின்வருமாறு மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலைத்திருக்கக்கூடிய வீதிப் பராமரிப்பு நிதியளிப்பினை வழங்குதலிலுள்ள நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் செயற்திறனை மதிப்பிடுவதற்கும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் செயற்பாடுகளை முன்னேற்றும் வழிகளை பரீட்சிப்பதற்கும் நிதியம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 3 ஆண்டுகளின் பின்னர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் தொழிற்பாடுகள் மீளாய்வு செய்யப்பட

வேண்டும். 2016 ஜனவரி 01 இலிருந்து அமுலுக்கு வரும் வகையில் நம்பிக்கைப் பொறுப்பு செயற்படுத்தப்பட்டிருந்த போதிலும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் முகாமைத்துவ சபை நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றலை மீளாய்வு செய்திருக்கவில்லை.

(ஆ) 2005 ஒக்தோபர் 26 இல் மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு செலவுவைக்கப்பட்ட 2006 சனவரி 01 முதல் அமுலுக்கு வரும் வகையில் பெற்றோல் மற்றும் டீசல் விற்பனையிலிருந்து அரசாங்கம் பெறுகின்ற வருமானத்திலிருந்து ஒவ்வொரு லீற்றர் பெற்றோலிற்கும் ரூபா 1 வீதமும் ஒவ்வொரு லீற்றர் டீசலிற்கும் ரூபா 0.50 வீதமும் அரசாங்கம் தனியாக ஒதுக்க வேண்டிய போதிலும் 2015 திசெம்பர் 31 இலும் கூட முன்மொழிவினை அமுல்படுத்துவதற்கு முறையான நடைமுறையொன்று உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒரு வழக்கமான அம்சமாக, வீதிப் பராமரிப்பு வேலைகளிற்கான அளவீட்டுப் பட்டியல்களிலுள்ள மதிப்பிடப்பட்ட கிரயங்களின் சேமிப்புக்கள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் செயன்முன்னேற்ற அறிக்கைகளில் அறிக்கையிட்ப்பட்டதுடன் அடித்தள நிலைமைகளின் ஆய்வின் பின்னர் வீதிப் பராமரிப்பு வேலைகளின் நோக்கெல்லை முறையாக தீர்மானிக்கப்படவில்லை என்பதை இது குறிப்பிட்டுள்ளது. நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்ட வீதிப் பராமரிப்பு வேலைகளின் கிரய சேமிப்புக்களின் விபரங்கள் கீழே கொடுக்கப்படுகின்றன.

| வீதியின் பெயர் | வீதி மாற்றம் | சேமிக்கப்பட்ட கிரயம் |
|---|---|---|
| | | ரூபா. மில்லியன் |
| கடுகஸ்தோட்டை–குருநாகல்–புத்தளம் வீதி | 38+400 கிலோமீற்றர் – 45+500 கிலோமீற்றர் | 5.65 |
| கடுகஸ்தோட்டை–குருநாகல்–புத்தளம் வீதி | 54+000 கிலோமீற்றர் – 62+330 கிலோமீற்றர் | 29.19 |
| பேராதனை – பதுளை – செங்கலடி வீதி | 03+100 கிலோமீற்றர் – 09+000 கிலோமீற்றர் | 33.33 |
| பேராதனை – பதுளை – செங்கலடி வீதி | 09+000 கிலோமீற்றர் – 13+700 கிலோமீற்றர் | 32.51 |
| கட்டுநாயக்கா – வெயாங்கொடை வீதி | 0+000 கிலோமீற்றர் – 4+000 கிலோமீற்றர் | 95.66 |
| கட்டுநாயக்கா – வெயாங்கொடை வீதி | 4+000 கிலோமீற்றர் – 9+500 கிலோமீற்றர் | 3.21 |

(ஆ) 2006 இன் அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.14.1 ஆம் பந்திக்கு முரணாக அஸ்பால்ற் மேற்பரப்பிடலிற்கும் கட்டுநாயக்கா – வெயாங்கொடை வீதியின் பராமரிப்புக்குமான ஒப்பந்தம் 02 பொதிகளாக பிரிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 313.40 மில்லியன் மற்றும் ரூபா 267.60 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 2014 திசெம்பர் 16 இல் ஒரே ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்தது. மேலும் அவற்றிற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

### 3.4 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்

பேராதனை – பதுளை – செங்கலடி வீதியின் 3.1 கிலோமீற்றர் தொடக்கம் 09 கிலோமீற்றர் வரையான வீதிப் பிரிவுகளின் பராமரிப்பில் ஈடுபட்டுள்ள ஒப்பந்தகாரரால் சமர்ப்பிக்கப்பட்ட விலைப்பட்டியலிலுள்ள 14 விடயங்களின் கீழுள்ள விலை வீதங்கள் பொறியியலாளர் மதிப்பீட்டில் பிரயோகிக்கப்பட்ட விலை வீதங்களை 100 சதவீதம் முதல் 997 சதவீதம் வரையான வீச்சில் விஞ்சியிருந்தன. மேலும் அவற்றிற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.

### 3.5 வழமைக்கு மாறான செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 யூன் 30 இல் நிதியத்திற்கான நிதியளித்தல் ஒழுங்கமைப்புக்கள் மூடப்பட்ட போதிலும் 2015 யூலை மாதத்தில் ஐக்கிய இராச்சியத்திலுள்ள பிர்மின்ஹாம் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற வெளிநாட்டுப் பயிற்சிநெறிக்கான கற்கைநெறிக் கட்டணங்கள் மற்றும் தற்செயல் படிகளிற்காக ரூபா 3.02 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) வீதித் துறை உதவிச் செயற்திட்டத்தின் சாத்தியவள ஆய்வு அறிக்கையின் மூலம் வேண்டப்பட்டவாறு நிதியத்தின் செயலகம் மாதிரி அடிப்படையில் வீதிப் பராமரிப்புக்களுக்கான தொழில்நுட்ப கணக்காய்வை நடாத்துதல், ஏற்றுக்கொள்ளப்பட்ட வீதிப் பராமரிப்பு நியமங்கள் / வழிகாட்டிகளைப் பயன்படுத்துதல் மற்றும் பிரதான செயலாற்றல் குறிகாட்டிகளுக்கிணங்க பராமரிப்பின் தரத்தை உறுதிப்படுத்தல் என்பவற்றில் தொடர்ச்சியாக ஈடுபட வேண்டும். மேலும் நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைக்கு தொழில்நுட்பக் கணக்காய்வுகளிற்கான செயன்முன்னேற்ற அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(இ) மத்திய மாகாணத்திலுள்ள தேசிய வீதிகளின் பராமரிப்புக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 310.36 மில்லியன் தொகையில் ரூபா 38.23 மில்லியன் தொகை மத்திய மாகாணத்திலுள்ள 38 மாகாண வீதிகளின் பராமரிப்பு வேலைகளுக்காக மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்தது.

(ஈ) வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்காகவும் வீதிப் பராமரிப்புக் கொள்கைகளை தீர்மானிப்பதற்காகவும் செயலகமொன்றை ஸ்தாபிப்பதற்கு மதியுரை சேவைகளுக்காக ரூபா 81.55 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் மதியுரைஞரினால் அறிமுகப்படுத்தப்பட்ட வீதிப் பராமரிப்புக் கொள்கைகளுக்கான பரிந்துரைகள் முழுமையாக அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் மதியுரைகளுக்கான உடன்படிக்கை 2014 நவம்பர் 11 இல் முடிவுறுத்தப்பட்டிருந்தது.

### 3.6 நிதிக் கட்டுப்பாடுகள் தொடர்பான விடயங்கள்

நிதிப் பிரமாணம் 134(3) இன் மூலம் வேண்டப்பட்டவாறு, மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் கொடுக்கல்வாங்கல்கள் வரிசை அமைச்சின் உள்ளகக் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.